# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 12090/விசாரணை/E/2022</u>**

திரு.Y.அக்பர் அகமது -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/உதவி ஆணையர்-2,
வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம்,
எழிலகம்,
சேப்பாக்கம், சென்னை-5. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 07.01.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சென்னை, தமிழ்நாடு வக்ஃப் வாரிய கண்காணிப்பாளர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.S.சையத் ஜாபீர் 12.03.2025 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 05.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் சார்பாக 07.03.2025 அன்று அதனை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் சார்பாக பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் இணைய தள Tracking Report-ன் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 05.03.2025 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவலை பரிசீலனை செய்கையில், இனம் 1-க்கு மேல்முறையீட்டாளருக்கு திரு.யாகூப் என்பவர் 13.01.1956 அன்று கையொப்பமிட்ட ஒரு ஆவணத்தை இணைத்து அனுப்பியுள்ளதும், இனம் 2-க்கு வக்ஃப் வாரிய உதவி ஆணையர் பணிக்காலம் குறித்த தகவல் தங்கள் அலுவலகத்தில் இல்லை என்று தகவல் வழங்கியுள்ளதும் தெரிய வருகிறது. இவ்வாணையத்தில் 07.03.2025 அன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம், மேல்முறையீட்டாளர் யாகூப் அலி பேக் என்பவர் வக்ஃப் உதவி ஆணையராக நியமிக்கப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்ட Certificate of Transfer of Charge-ன் நகலை கோரியுள்ளது குறித்து வினவியபோது, மேற்படி அலுவலரின் Certificate of Transfer of Charge-ன் நகல் ஏதும் தங்கள் வக்ஃப் வாரிய அலுவலகத்தில் இல்லை என்றும், அவரது நியமனம் வருவாய்த் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அது குறித்த CTC வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் இருக்கக்கூடும் என்று தெரிவித்தார்.

3. மேல்முறையீட்டாளர் 07.03.2025 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், வக்ஃப் வாரியத்தின் பொதுத் தகவல் அலுவலர் 05.03.2025 தேதியிட்ட கடிதத்தில், பொய்யான தகவலை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். திரு.யாகூப் அலி பைக் என்பவர்

அரசாணை நிலை எண்.660, வருவாய்த் துறை, நாள் 02.03.1955-ன்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள வக்ப் சொத்துக்களை அளவிடு செய்வதற்காக 1955-ம் ஆண்டு மூன்று மாதங்கள் வக்ப் வாரிய உதவி ஆணையராக நியமிக்கப்பட்டு, அது குறித்து 12.01.1955 தேதியிட்ட அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் வக்ஃப் வாரிய பொதுத் தகவல் அலுவலர் 05.03.2025 தேதியிட்ட கடிதத்தில் உதவி ஆணையராக நியமிக்கப்படாத திரு.யாகூப் என்பவர் தொடர்பான ஆவண நகலை இணைத்து அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்து, பொதுத் தகவல் அலுவலர் மீது சட்டப்பிரிவு 18(1)-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. ஆகவே இன்றைய விசாரணையின் முடிவில், இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன :-

1. *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், **சென்னை-5, வருவாய் நிர்வாக ஆணையரக மேல்முறையீட்டு அலுவலர்/துணை ஆணையர் அவர்கள்,***

- *மேல்முறையீட்டாளர் தனது07.03.2025 தேதியிட்ட கடிதத்தில், ‘சட்டப்பிரிவு 6(1) மனுவில் திரு.யாகூப் அலி பேக் என்பவர் உதவி ஆணையராக 02.03.1955 அன்று நியமிக்கப்பட்டதாகவும், அது குறித்த தகவலை வழங்க கோரியுள்ளதாகவும், ஆனால் வக்ஃப் வாரிய பொதுத் தகவல் அலவலர் 13.01.1956 அன்று யாகூப் என்பவர் கையொப்பமிட்ட ஆவண நகலை வழங்கியுள்ளதாகவும், அவர் முன்னுக்குப்பின் முரணான தகவலை வழங்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளதாலும்,*

- *இன்று விசாரணையில் ஆஜரான வக்ஃப் வாரிய பொதுத் தகவல் அலுவலர் மேற்படி அலுவலர் வருவாய்த் துறையால் நியமிக்கப்பட்டவர் என்று தெரிவித்ததாலும்,*

- சென்னை-5, வருவாய் நிர்வாக ஆணையரக பொதுத் தகவல் அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் வக்ஃப் வாரிய பொதுத் தகவல் அலுவலர் ஆகியோரிடம் திரு.யாகூப் அலி பேக் என்பவர் உதவி ஆணையராக என்று நியமிக்கப்பட்டார், அவரது பணிக்காலம் மற்றும் CTC குறித்த ஆவணங்கள் அவர்களது பொது அதிகார அமைப்பில் உள்ளதா என்பது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு,

- மேல்முறையீட்டாளர் கோரிய ஆவணம் கிடைக்கப் பெற்றால் அதன் நகலையும்

- அவ்வாறு மேல்முறையீட்டாளர் கோரிய ஆவணம் கிடைக்கப் பெறாபட்சத்தில், மேற்குறித்த நான்கு பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்தும் அது குறித்த பிரமாண பத்திரத்தையும் (Sworn Affidavit)

  *பெற்று, மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக **இவ்வாணையத்தில் 30.05.2025 அன்று சென்னை-5, சென்னை வருவாய் நிர்வாக ஆணையரக உதவி ஆணையர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு சென்னை-5, சென்னை வருவாய் நிர்வாக ஆணையரக துணை ஆணையர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. ***இவ்வழக்கு தொடர்பாக 09.06.2025 அன்று காலை 11.00 மணிக்கு விசாரணை மேற்கொள்ளப்படும்.*** *அன்றைய தினம்* சென்னை-5, வருவாய் நிர்வாக ஆணையரக பொதுத் தகவல் அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக

உதவியாளர்(பொது), செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் வக்ஃப் வாரிய பொதுத் தகவல் அலுவலர் தத்தம் அறிக்கைகளுடனும் மற்றும் மேல்முறையீட்டாளரும் தவறாமல் ஆஜராகிட வேண்டும் *என்றும், இவ்விசாரணைக்கு தனியே அழைப்பாணை ஏதும் அனுப்பப்படமாட்டது என்றும் இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

**ஆணை நாள் : 09.04.2025**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12090/விசாரணை/E/2022</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/துணை ஆணையர்,
வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5.

பொதுத் தகவல் அலுவலர்/கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,
1 ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர், சென்னை-1.

பொதுத் தகவல் அலுவலர்/உதவி ஆணையர்-2
வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5.

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-1.

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு.

திரு.Y.அக்பர் அகமது
113 அமீர் மகால்,
இராயப்பேட்டை, சென்னை-15.

Copy to: File

RJ/PS 9.4